**E–0244**

**Sub. Code**
**1BTA5C1**

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fifth Semester**

தமிழ்

சங்க இலக்கியம்

**(CBCS – 2011 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி – அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. ‘குறு கண்வாயுறை அழுத்திய காது’ என்று நெடுநல்வாடை எதனைக் குறிப்பிடுகிறது?

2. நெடுநல்வாடை - பெயர்க் காரணத்தை கூறுக.

3. ‘பசந்தெழு பருவரல்’ கூறியது யார்?

4. மலையுடை அருஞ்சுரம் என்பதன் பொருள் யாது?

5. ஐங்குறுநுற்றின் மருத நிலப்பாடல்களைப் பாடியவர் யார்?

6. ‘படைப்புப் பல படைத்து’ எனப் பாடியவர் யார்?

7. ‘அரியெப் சிலம்பின்’ எனத் தொடங்கும் பாடலின் ஆசிரியர் யார்?

8. ‘குழவி தளர்நடை காண்டல் இனிதே’ - என்ற செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? ஆசிரியர் யார்?

9. ‘கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்’ - என்ற செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

10. ‘கல்வி கரையில’ என்று ஏன் குறிப்பிடுகிறார்?

பகுதி – ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) பாசறை அமைப்பை நெடுநல் வாடை எங்ஙனம் விளக்கியுள்ளது?

(அல்லது)

(ஆ) தலைவியின் பிரிவுத்துயரை நெடுநல் வாடை எவ்வாறு புனையப்பட்டுள்ளது?

12. (அ) நற்றிணையில் இயற்கைக் காட்சிகள் காட்டியுள்ள அழகை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அகவன் மகளே' எனத் தொடங்கும் பாடலின் கருத்தை எழுதுக.

13. (அ) 'கோழிலை வாழை' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலின் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அரிபெய் சிலம்பின்' எனத்தொடங்கும் பாடலின் கருத்தை எழுதுக.

14. (அ) 'காய்நெல் அறுத்து' எனத்தொடங்கும் பிசிராந்தையாரின் பாடற் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'பல்சான்றீரே' எனத் தொடங்கும் பாடற்கருத்தை எழுதுக.

15. (அ) ஈகையின் இன்றியமையாமையை வள்ளுவர் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'உரனுடையான் உள்ளம்' மற்றும் 'நறியமலர் பெரிது நாறாமை' என்ற பாடலின் கருத்தை எழுதுக.

பகுதி – இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. நெடுநல்வாடை குறிப்பிடும் அகக்காட்சியை விவரிக்க.

17. வேட்கைப்பத்தின் கருத்தை விவரிக்க.

18. புறநானூற்றில் நிலையாமை குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

19. குறுந்தொகையில் ஔவையார் பாடல்களில் காணலாகும் உவமையினை விவரிக்க.

20. சேரநாட்டின் வளத்தை பதிற்றுப்பத்து எங்ஙனம் காட்சிப்படுத்தியுள்ளது என்பதை மதிப்பிடுக.

**E–0245**

| Sub. Code |
|---|
| **1BTA6C1** |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2019

### Sixth Semester

தமிழ்

தமிழின் செம்மொழிப் பண்புகள்

**(CBCS – 2011 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

பகுதி அ  ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. தென் திராவிட மொழிகளைக் கூறுக.

2. கால்டுவெல்லின் ‘திராவிடம்’ என்ற சொல்லாட்சியின் சிறப்பு யாது?

3. கலைச்சொல் அகராதி குறிப்பிடும் செம்மொழித் தகுதிகள் யாவை?

4. செவ்வியல் வாதம் என்பது யாது?

5. மன்னன் வழியே மக்கள் நடப்பர் என்ற சமயம் பொறையினை விளக்குக.

6. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல்கள் எத்தனை?

7. செம்மொழியின் பண்புகள் யாவை?

8. திணை இலக்கியம் என அழைக்கப்படுவது எது?

9. பாடுபொருள் என்றால் என்ன?

10. இலக்கிய வளம் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் தொன்மை மிக்க வழக்காறு பெற்ற மொழி என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத் தொகுப்பு முறையினைப் புலப்படுத்துக.

12. (அ) தமிழில் உள்ள அகராதிகளின் சிறப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) செவ்வியல் வாதத்தை விளக்குக.

13. (அ) எட்டுதொகையில் உள்ள அகநூல்களின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இறையனார் களவியல் உணர்த்தும் கருத்துக்களை விவரி.

14. (அ) சங்க இலக்கியம் உணர்த்தும் பொதுமையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்ச் செம்மொழியின் நடுவுநிலைமைப் பண்பினை சான்றுடன் விவரி.

15. (அ) தமிழ்ச்செம்மொழி எடுத்துரைக்கும் அகத்திணை வாழ்வியல் செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியங்களில் காணலாகும் கற்பனைத் திறன் பற்றி விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. திராவிட மொழிகளின் முப்பிரிவுகளை ஆய்க.

17. தமிழின் செவ்வியல் கருத்துக்களை விவரி.

18. மணிமேகலையின் சிறப்புக்களைத் தொகுத்து எழுதுக.

19. தமிழ்மொழியின் தொன்மை குறித்துக் கட்டுரை வரைக.

20. பழந்தமிழரின் இயற்கைக் கூறுகளை வெளிப்படுத்துக.